தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
Website: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : திரு மகேசன் காசிராஜன் இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றம் நடுவர்

முறையீட்டு மனு எண். 148/மா/2024,
நாள் 18.12.2024

திரு கோ. கோவிந்தராஜ், சென்னை. ................. முறையீட்டு மனுதாரர்.

மண்டல அலுவலர், ................ எதிர் மனுதாரர்.
மண்டலம் 10,
பெரு நகர சென்னை மாநகராட்சி.

சென்னை, அசோக் நகர் 15வது தெரு, கதவு எண்.22/43 என்கிற முகவரியில் வசிக்கும் திரு கோ.கோவிந்தராஜ் என்பவரின் 27.08..2024 மற்றும் 05.09.2024 நாளிட்ட மனுக்கள் இம்முறைமன்ற நடுவத்தில் 27.08.2024 மற்றும் 05.09.2024 அன்று பெறப்பட்டு, 148/மா/2024, என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனுக்கள் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது

## ஆணை

சென்னை, அசோக் நகர் 15வது தெரு, கதவு எண்.22/43 என்கிற முகவரியில் வசிக்கும் திரு கோ.கோவிந்தராஜ் என்பவர் 27.08.2024 மற்றும் 05.09..2024 நாளிட்ட தனது மனுக்களில் கீழ்க்கண்டவாறு புகார்களை தெரிவித்துள்ளார்.

மேற்கண்ட இடத்தில் குடியிருக்கும் நான் ஒரு சமூக செயற்பாட்டாளர் ஆவேன். சென்னை வடபழனி, குமரன் காலனி Bus Depot சாலையையொட்டி, குமரன் காலனி மெயின்ரோடு கதவு எண்.21/178–ல் Second Skin Clothing வணிக வளாக கட்டிட முன்புறமும், அதையொட்டியுள்ள பல தளங்கள் கொண்ட கட்டிட முன்புறமும், Sathya வணிக வளாக கட்டிட முன்புறமும், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான நடைபாதைகளை ஆக்கிரமித்து சுமார் 4 அடி உயரம், 20 அடி அகலம், 250 அடி நீளத்தில் Steps and Ramp மற்றும் இரும்பு வேலிகள் அமைத்துள்ளதால், பாதசாரிகள் நடைபாதையை பயன்படுத்த முடியாமல் தெருவின் நடுவே செல்லும் நிலை உள்ளது. மேலும், மழை காலங்களில் தண்ணீர் சீராக செல்ல முடியாமல் தடைப்படுகிறது. மழைநீர் கால்வாயில் உள்ள மூடியை அகற்றியுள்ளதால் கால்வாயை சுத்தம் செய்யமுடியாமல் ஊழியர்கள் சிரமப்படுகிறார்கள். இது குறித்து 15.02.2024 நாளில் புகார் மனு அளித்தும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் அலுவலர்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே, மேற்கண்ட ஆக்கிரமிப்பை அகற்றிடவும், என் மனு மீது

நடவடிக்கை எடுக்காத பெருநகர சென்னை மாநகராட்சி சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

2. மேற்கண்ட புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 24.09.2024 நாளிட்ட அறிவிக்கை மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் மண்டல அலுவலரிடமிருந்து எந்த அறிக்கையும் பெறப்படவில்லை.

3. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 05.12.2024 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 27.11.2024 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. மனுதாரர் 05.12.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

“சென்னை வடபழனி, குமரன் காலனி மெயின் ரோடு, கதவு எண்.21/178, Second Skin Clothing வணிக வளாக கட்டிடத்தின் முன்புறமும், அதையொட்டியுள்ள பல தளங்கள் கொண்ட கட்டிடத்தின் முன்புறமும், Sathya வணிக வளாக கட்டிடத்தின் முன்புறமும், மாநகராட்சிக்கு சொந்தமான நடைபாதைகளை ஆக்கிரமித்து சுமார் 4 அடி உயரம், 20 அடி அகலம், 250 அடி நீளத்தில் Steps and Ramps மற்றும் இரும்பு வேலிகள் அமைத்துள்ளனர்.

பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் ஆக்கிரமித்து கட்டப்பட்ட படிக்கட்டுகளை அகற்றினர். ஆனால் கட்டிடத்தின் உரிமையாளர் மீண்டும் படிக்கட்டுகளை கட்டி நடைபாதையை ஆக்கிரமித்துள்ளனர். எனவே, நிரந்தரமாக ஆக்கிரமிப்பினை அகற்ற உரிய நடவடிக்கை எடுக்க பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் அலுவலர்களுக்கு உத்தரவு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன் என தெரிவித்துள்ளார் ”.

5. பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 10–ன் உதவி செயற்பொறியாளர் 05.12.2024 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

“மனுதாரர் அளித்த புகார் மனு தொடர்பாக கள ஆய்வு செய்யப்பட்டு மாநகராட்சி மூலம் ஆக்கிரமித்து கட்டப்பட்ட படிகட்டுகள் அகற்றப்பட்டுவிட்டன என்பதை புகைப்பட ஆதாரத்துடன் இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன். மேலும் மனுதாரர் குறிப்பிட்ட ஆக்கிரமிப்பு தொடர்பாக பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பாக தொடர் கண்காணிப்பு செய்யப்பட்டு ஆக்கிரமிப்பு இருப்பின் அதனை அகற்றிட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்”.

6. முறையீட்டு மனுதாரரின் புகார் மனுக்கள், வாக்குமூலம், பெருநகர சென்னை மாநகராட்சியின் உதவி செயற்பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

மனுதாரர் சென்னை, வடபழனி, குமரன் காலனி Bus Depot சாலையையொட்டியுள்ள, குமரன் காலனி மெயின்ரோடு கதவு எண்.21/178–ல் Second Skin Clothing வணிக வளாக

கட்டிடத்தின் முன்புறமும், அதையொட்டியுள்ள பல தளங்கள் கொண்ட கட்டிடத்தின் முன்புறமும் Sathya வணிக வளாக கட்டிடத்தின் முன்புறமும், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான நடைபாதைகளை ஆக்கிரமித்து சுமார் 4 அடி உயரம், 20 அடி அகலம், 250 அடி நீளத்தில் Steps and Ramp மற்றும் இரும்பு வேலிகள் அமைத்துள்ளதால், பாதசாரிகள் நடைபாதையை பயன்படுத்த முடியாமல் தெருவின் நடுவே செல்லும் நிலை உள்ளது என்றும் மேலும், மழை காலங்களில் தண்ணீர் சீராக செல்ல முடியாமல் தடைபடுகிறது என்றும், இது குறித்து 15.02.2024 நாளிட்ட புகார் மனு அளித்தும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் அலுவலர்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே, மேற்கண்ட ஆக்கிரமிப்பை அகற்றிடவும், என்னுடைய மனு மீது நடவடிக்கை எடுக்காத பெருநகர சென்னை மாநகராட்சி சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

மனுதாரர் அளித்த புகார் மனு தொடர்பாக கள ஆய்வு செய்யப்பட்டு மாநகராட்சி மூலம் ஆக்கிரமித்து கட்டப்பட்ட படிகட்டுகள் அகற்றப்பட்டதும், பெருநகர சென்னை மாநகராட்சியால் தொடர் கண்காணிப்பு செய்யப்பட்டு ஆக்கிரமிப்பு இருப்பின் அதனை அகற்றிட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதும், பெருநகர சென்னை மாநகராட்சியின் உதவி செயற்பொறியாளரின் வாக்குமூலத்தில் இருந்து அறிய முடிகிறது.

7. இந்நேர்வில் குறிப்பிட்டுள்ள ஆக்கிரமிப்பு பெருநகர சென்னை மாநகராட்சியால் அகற்றப்பட்ட பின்னர், கட்டிட உரிமையாளர் மீண்டும் நடைபாதையை ஆக்கிரமிப்பு செய்து, மீண்டும் அந்த ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டுள்ளது. எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் உதவி செயற்பொறியாளர் வாக்குமூலத்தில் உறுதி அளித்தவாறு பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம் 10–ன் அலுவலர்கள் தீவிர தொடர் கண்காணிப்பு செய்து, உரிய நிரந்தர சட்டபூர்வ நடவடிக்கை மேற்கொள்ளவும் மூன்று மாதங்களுக்கு பின்னர், அவ்விடத்தை ஆய்வு மேற்கொண்டு, ஆக்கிரமிப்பு ஏதுமில்லை என்பதை உறுதி செய்து, அது குறித்த அறிக்கையினை இம்முறை மன்றத்திற்கு அனுப்பி வைக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் மண்டல அலுவலருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2024-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 18–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு கோ. கோவிந்தராஜ்
எண். 22.43, 15வது தெரு
அசோக் நகர்,
சென்னை 83.

2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை 600 003.

3) மண்டல அலுவலர்,
மண்டலம் 10,
பெருநகர சென்னை மாநகராட்சி,
எண். 64 என்.எஸ்.கே. சாலை,
கோடம்பாக்கம்,
சென்னை 24.

4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண். 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 28.

5) இணை இயக்குநர்,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண். 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை 28

நகல் : மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ. / உதிரி.

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

19/12/24

சட்ட ஆலோசகர்/செயலாளர் (FAC).

19/12/24

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் சென்னை-600 032